**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : SC. No. 3/ 2009.

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 2
Defence
Court

Name : திரு. அலாவுதீன்.

Father's/Husband Name : மீரான் முகைதீன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 18th August 2021.

**முதல் விசாரணை**:

நான் தற்போது, கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் தென்காசியில் குடியிருந்தேன். கார் ஓட்டுனராக தொழில் செய்கிறேன். அ.சா.1. உறனீபா என்ற நாகூர் உறனீா என் உடன் பிறந்த அண்ணன். 14.08.2007 ஆம் தேதி அன்று ஏற்கனவே கொலைசெய்யப்பட்ட குமார் பாண்டியன் வழக்கு சம்பந்தமாக என் அண்ணன் உறனீபா என்ற நாகூர் உறனீபா மீது பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கு சம்பந்தமாக பிணையில்வெளியில் வந்து, தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் அவரும் முருகேசன் என்ற அப்துல்லாவும் கையொப்பம் செய்துவிட்டு திரும்பவரும்போது, நான் தனியாக ஒரு பைக்கில் முன்னே சென்றேன். அவர்கள் எல்லாம் என்னைத் தொடர்ந்து ஆட்டோவில் வந்தார்கள். ஊருக்குள் எல்.ஆர்.எஸ். பாளையம் என்ற இடத்தில் வரும்போது, ஒரு காரில்

வந்த ஒரு கும்பல் என்னை வழிமறித்தது. அப்போது யார் என்று தெரியவில்லை. காரிலிருந்து இறங்கி வந்த நபர் என் தலையின் இடதுபக்கம் வெட்டினார். அதனால்,காயத்தால் சிறிதுதூரம் போய் நான் மயங்கிவிழுந்துவிட்டேன். அப்போது, ஒரு ஏட்டையா வந்து, ரோட்டில் கிடந்த என்னை எழுப்பினார். எனக்கு காயங்கள் ஏற்பட்டிருந்ததால் மருத்துவமனைக்கு கூட்டிப்போனார். அங்கு எனக்கு தையல்போட்டு சிகிச்சை செய்தார்கள். என்னிடம் மருத்துவமனையில் வைத்து போலிசார் ஒரு பேப்பரில் கையெழுத்து கேட்டார். நான் கையொப்பம் செய்துகொடுத்தேன். அதன்பின்பு, மருத்துவமனையில் 1 மணி நேரம் சிகிச்சையிலிருந்தேன். மருத்துவமனையில் 2 முதல் 3 வரையிலான உடல்கள் கிடந்தன. அதைக்காட்டி என்னிடம் அடையாளம் கேட்டார்கள். அதில் இறந்தபோனவர்களை பசீர் அகமது, அசன் கனி ராஜா, நாகூர் மீரான் என்று அவர்களை நான் அடையாளம் காட்டினேன். அதன்பின்னர் என்னையும் போலிசார் கைது செய்து, நீதிமன்ற நடுவர் இல்லத்திற்கு கூட்டிச்சென்றார்கள். நீதிமன்ற காவலில் 7 மாதங்கள் இருந்தேன். பின்னர் நான் பிணையில் வெளியே வந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஆய்வாளரோ, காவல்துறை கண்காணிப்பாளரோ இவ்வழக்கில் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1. கையொப்பம் செய்யும்போது எதுவும் எழுதியிருக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

கடந்த, 14.08.2007 இல் காவல் ஆய்வாளர் ஆயக்குடி வட்டம் அவர்களும், 15.08.2007 இல் காவல்துறை துணை கண்காணிப்பாளர், சேரன்மாதேவி அவர்களும் என்னை விசாரித்தார்கள் என்றும், எங்கள் ஊரில் அம்மன் சந்நிதி பஜாரில் பள்ளிவாசல் கட்ட ஏற்பாடுகள் செய்தார்கள் என்றும், அதைக் கட்டவிடாமல் தென்காசி இந்து முன்னணி தலைவராக இருந்த குமார் பாண்டியன் தடுத்து வந்தார் என்றும், பாபர் மசூதி இடிப்பு தினமாக டிசம்பர் 6 ஆம் தேதி, இந்து எழுச்சி நாள் என்று சொல்ல மக்களுக்கு இனிப்பு வழங்கினார் என்றும், அதனால் எங்களது த.மு.மு.க அமப்பினரும், முஸ்லீம் முக்கிய பிரமுகர்களும் சேர்ந்து என்ன செய்வது என்று பேசினார்கள் என்றும், குமார் பாண்டியனை 17.12.2006 ஆம் தேதி உறனீபா, முருகேசன் என்ற அப்துல்லா, செய்யது சுலைமான்

ஆகிய 3 பேரும் சேர்ந்து வெட்டிக் கொலை செய்தார்கள் என்றும், குமார் பாண்டியன் கொலை வழக்கில் உறனீபா மற்றும் நானும், முருகேசன் என்ற அப்துல்லாவும் ஜாமீனில் வெளியேவந்து, தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பமிட்டு வந்தோம் என்றும், கையொப்பம் போட போகும்போது, 14.08.2007 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் வழக்கம்போல, கையொப்பம் போட்டுவிட்டு, நான் டி.என்.72. எக்ஸ். 0558 என்ற மோட்டார் சைக்கிளில் முன்னால் செல்ல, என்னைத் தொடர்ந்து பின்னால் டி.என்.76. வி. 9529, டி.என்.76. பி. 4974 என்ற ஆட்டோக்களில் வந்துகொண்டிருந்தோம் என்றும், டி.என்.76. பி. 4974 என்றும், காலை சுமார் 10.15 மணிக்கு தென்காசி எல்.ஆர். எஸ். பாளையம் கடந்து போய்க்கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேல்முத்தாராம்மன் கோவிலுக்கு தென்புறம் கிழக்குப் பார்த்துப் போனோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. அப்போது, மலையான் தெரு, சொர்ணத்தேவர் மகன் சக்திபாண்டியன் என்பவர் டி.என். 72. இசட். 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர் காரில் செந்தில் என்ற செந்தில்குமார், சக்தி பாண்டியன், கபிலன், சுப்பிரமணியன், சுரேந்திரன் ஆகியோர்கள் என் பைக் மீது மோதி இடித்து தள்ளினார்கள் என்றும், ஆளுக்கொரு அரிவாளுடன் வந்து வெட்டுங்கள் சொல்லுங்கள் என்று சக்தி பாண்டியன் சொல்லிக்கொண்டு ஓடிவரவும், நானும், மற்றவர்களும் பைக் மற்றும் ஆட்டோவை நிறுத்திவிட்டு மேற்காக ஓடினோம் என்றும், மேற்கு முத்து டீக்கடையிலிருந்து சேகர், பூக்கடை ரமேஷ், தங்ககடை சக்தி, ஆட்டோ ரமேஷ், சுரேஷ், இளஞ்சிரோடு சண்முகம், தங்கத்துரை, அலெக்ஸ் என்ற அலெக்ஸ்பாண்டி, நந்நகரம், பேரின்பராஜீ, இளநீர் கண்ணன் மற்றும் சிலரும் அரிவாள், வீச்சரிவாளுடன் வந்து வழிமறித்தார்கள் என்றும், கோவிலுக்கு தென்புறம் வைத்து, என்னை கேபிள் டி.வி. முத்து அரிவாளால் என் தலையின் பின்புறம் வெட்டினான் என்றும், சக்தி பாண்டியன் அரிவாளால் பசீரின் தலையின் மத்தியில் 3 வெட்டுக்கள் வெட்டினான் என்றும், அலெக்ஸ் என்ற அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரானின் இடது கன்னத்தோடு சேர்த்து கழுத்தின் பின்னால் வெட்டினான் என்றும், வலது கை முட்டுக்கு மேலும், இடதுபுறங்கையிலும் அரிவாளாலால் கொத்தினான் என்றும், அசன் கனி மேற்கையிலும், கழுத்துக்கு கீழும் மாறி, மாறி கொத்தினான் என்றும், தங்கத்துரை, ராஜா முகம்மதுவின் தலை, இடது கன்னம், இடது தோள், வலது தோளில் வெட்டினான் என்றும், சுரேந்தர், பசீரின் தலையின் பின்புறம் வெட்டினான் என்றும், அசன் கனியில் வலது விலா,

வலது கால் தொடையிலும் வெட்டினான் என்றும், கேபின் டி.வி. முத்து, மீரான் மைதீனின் வலது மார்பில் வெட்டினான் என்றும், சண்முகம் இரும்புப் பட்டையால் முருகேசன் என்ற அப்துல்லாவின் தலையிலும், முகத்திலும் மாறி, மாறி அடித்தான் என்றும், செந்தில் அரிவாளால் அசன் கனியின் கழுத்து, நாடி, இடது கன்னம், இடது கால்களிலும் மாறி, மாறி வெட்டினான் என்றும், சேகர் அரிவாளால் அசன் கனியின் வலதுபுற மேற்கையில் வெட்டினான் என்றும், ராஜா முகம்மதுவை வலதுகை மணிக்கட்டு, இடதுகை மணிக்கட்டிலும் வெட்டினான் என்றும், சுரேஷ் அரிவாளால் பசீரின் இடது கையில் மாறி, மாறி வெட்டினான் என்றும், செய்யது அலியின் பிடரியிலும், கழுத்தின வலதுபக்கம் வெட்டினான் என்றும், பிஸ்தாமணி அரிவாளால் அசன் கனியின் வலது கை முழங்கைக்கு கீழும், வலது நெற்றியிலும், தலையின் இடது பக்கம் வெட்டினான் என்றும், பசீரின் வலது தோள், இடது காது, இடது முழங்கையில் வெட்டினான் என்றும் எங்களைக் காப்பாற்றிக்கொள்ள நாங்களும் வெட்டினான் என்றும் போலிசார் விசாரணையின் போது, சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை. அசன் கனி, பசீர், நாகூர் மீரான் ஆகியோர்கள் தரையில் இறந்துபோய் கிடந்தார்கள் என்றும், வெட்டுப்பட்ட என் எண்ணன் உறனீபா அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும், அங்கும் அவர்களில் 2 பேர் இறந்ததுபோல் கிடந்தார்கள் என்றும், வெட்டுக்காயத்துடன் என் அண்ணன் உறனீபா அங்கிருந்து ஓடினார் என்றும், காயத்துடன் இருந்து முருகேசன் என்ற அப்துல்லா, ஆயூப் அன்சாரி, ராஜா முகம்மது, செய்யது அலி, மீரான் மைதீன் ஆகியோரை தகவல் தெரிந்துவந்த எங்கள் டி.எம்.எம்.கே. ஆம்புலன்சில் தென்காசி அரசு மருத்துவ மனைக்கு கொண்டுபோகச் சொல்லிவிட்டு, நான் உடனடியாக, காலை 10.30 மணிக்கு தென்காசி போலிசுக்கு வந்து, பதற்றத்துடன் இன்ஸ்பெக்டரின் புகாரிடன் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், நான் சொல்லச் சொல்ல எழுதினார்கள் என்றும், படித்துக்காட்டினார்கள் என்றும், நான் சொன்னதுபோல் எழுதியிருந்தது என்றும், நான் கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரின்பேரில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலும், நான் கையெழுத்துப் போட்டேன் என்றும், என்னை சிகிச்சைக்கு தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றும், எனது புகாரில் பசீர், அசன் கனி, நாகூர் மீரான் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாகச் சொன்னேன் என்றும், அசன் கனி மட்டும் சம்பவத்தில் இறந்திருக்கிறார் என்றும், காயம்பட்ட பசீர், நாகூர் மீரானையும் எங்கள் ஆம்புலன்சிலேயே மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள்

என்றும், போகும்வழியில் பசீர் இறந்துள்ளார் என்றும், காயம்பட்டவர்கள் தென்காசி மருத்துவமனையில் கிசிச்சை பெற்றும், பாளையம்கோட்டை ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு கொண்டுசென்றுவிட்டதாகவும், மருத்துவமனைக்கு சென்றபோது தெரிந்தது என்றும், நவாஸ் என்பவருக்கு காயம் இருந்தது என்றும், கன்னிமாரம்மன் கோவில் தெருவிலுள்ள அருணாச்சலபுரம் தெரு சேகரும், இளஞ்சிரோடு, செண்பகமும் இந்த சம்பவத்தை தூண்டிவிட்டதாக தெரிந்தது. தென்காசி அரசு மருத்துவமனை பிரேத வைப்பறையில் பசீர் என்ற பசீர் முகம்மது பிரேதம் அருகே வைத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரிததார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இதைப்போலவே, காவல்துறை துணை கண்காணிப்பாளர், சேரன்மாதேவி அவர்கள் விசாரித்தபோதும் மேலே சொல்லியுள்ளதுபோலவே சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நாங்கள் இருதரப்பிலும் உடன்படிக்கை செய்துகொண்டு, காவல்துறை வழக்கினை தகர்க்கும் வகையில் மறைத்து, நடந்த சம்பவங்களை மறைத்து பொய்யாக நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>14 மற்றும் 16 எதிரகள் தரப்பிலான வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>

நான் கார் டிரைவராக பணிபுரிகிறேன். தினமும் காலை வேலைக்கு சென்றுவிட்டு, மாலைதான் வீடு திரும்புவேன் என்றால், கார் ஓட்டுனராக ஒருநாளைக்கு வேலை இருக்கும். ஒரு நாளைக்கு வேலை இருக்காது. நான் எந்த மதம் சார்ந்த அமைப்பிலும் உறுப்பினராக இல்லை. பள்ளிவாசல் சம்பந்தமாக 1992 ஆம் ஆண்டிலிருந்தே பிரச்சனைகள் இருந்தது என்றால் சரிதான். என்னை இடித்ததாகச் சொல்லப்படும் ஒரு வெள்ளைக் கார் அன்றைய தினத்தில்அது விபத்து மட்டும்தான். அந்த காருக்கும், இந்த சம்பவத்திற்கும் சம்பவம் கிடையாது. அது என்ன வகையான கார்என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கும்போதும் இதைத்தான் சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று என்னை ஒருவர் தாக்கியதாகத்தான் புகார் கொடுத்தேன். மற்றபடி மேற்படி புகார் பற்றி எதுவும் தெரியாது. 15.08.2007 இல் நான் அரசு மருத்துவமனையிலிருந்தபோது, எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில்தான் கையொப்பம் வாங்கினார்கள். அந்த வெள்ளைப் பேப்பரில் என்னை தாக்கியதற்காகத்தான் கையொப்பம் வாங்குவதாகச் சொன்னார்கள். அந்த எழுதப்படாத வெள்ளைப் பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கிதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துகொண்ட விபரத்தினை தெரிந்துகொண்டேன். சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால்

சரிதான். இந்த வழக்கில், யார், யார் காயம் அடைந்தார்கள் என்றும், யார், யார் இறந்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்று போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகளைத் தெரியாது என்றால் சரிதான். அவர்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், பின்னிட்டு போலிசார் வழக்கிற்காக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1. என் அண்ணன் என்றால் சரிதான். அ.சா.1 க்கும், குமார் பாண்டியன் கொலை வழக்கிற்கும், இந்த கொலை வழக்கில், அண்ணன், தம்பி உறவினர்களை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போலிசாரால் எந்த ஒரு அடையாள அணிவகுப்பும் நடத்தவில்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 4, 6 முதல் 11, 13, 15 மற்றும் 17 முதல் 19 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**5 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**12 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**